28 DEC 1995

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1995 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைச் சட்டம்

---

*(1995, ஜூலை மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1995, ஜூலை மாதம் 07 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : ரூபா 1.50** **தபாற் செலவு : ரூபா 2.55**

## 1995 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, இலங்கை, தொழிற்பயிற்சி அதிகாரசபைச் சட்டம்

[1995, ஜூலை, மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ 60/94

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை ஒன்றைத் தாபிப்பதற்கும், அந்த அதிகாரசபையின் தத்துவங்களையும் கடமைகளையும் அத்துடன் பணிகளையும் குறித்துரைப்பதற்கும் மற்றும் அத்துடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, இலங்கை, தொழிற்பயிற்சி அதிகாரசபைச் சட்டமென எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான (இதனகத்துப்பின்னர் "நியமித்த திகதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும.

### பாகம் I

### இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையைத் தாபித்தலும் அதன் அமைப்பும்

2. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, (இதனகத்துப்பின்னர் "அதிகார சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையென அழைக்கப்படவேண்டிய அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையைத் தாபித்தல்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன் இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் உடையதாதலும் வேண்டும்; அத்துடன் அந்தப் பெயரில் வழக்குத்தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

3. அதிகாரசபையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :— அதிகார சபையின் பணிகள்.

(அ) ஆள்வலுப்பிரிவினாலும் மூகாரிப் பயிற்சி நிறுவகத்தினாலும், நியமித்த திகதிக்கு நேர்முந்திய நாளன்று நடாத்தப்படும் தொழிற்பயிற்சிக் கருத்திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டம் ஒவ்வொன்றையும் தொடர்ந்து நடாத்துதல்;

(ஆ) தொழிற்பயிற்சிக்காக நிகழ்ச்சித்திட்டங்களை முறைப்படுத்துதல் அத்துடன், நேரடியாக அல்லது பகிரங்க அல்லது தனியார் துறையிலான எதேனும் மூகவர் நிலையத்தினூடாகத் தகவுடைய ஆட்களுக்கு, வேலைவாய்ப்புக்குத் தேவைப்படுத்தப்படும் அவசியமான தேர்ச்சித் திறமைகளை அவர்கள் பெறுவதை இயலச்செய்யக்கூடியவாறு தொழிற்பயிற்சி வழங்குதல்;

(இ) தேசிய தொழிற் தேர்வுகள் மற்றும் பரீட்சைகள் நடாத்தி 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்விச் சட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்துக்கு இணங்கத் தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்களும் வேறு அளிப்புகளும் வழங்குதல்;

(ஈ) தொழிற் பயிற்சியில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கை எடுத்தல்;

(உ) பகிரங்க அல்லது தனியார் துறையில் உள்ள முகவர் நிலையங்களினால் நடாத்தப்படும் எல்லாவகையான தொழிற்பயிற்சிகளையும் ஒருங்கிணைத்தல், அப்பயிற்சிகள் எல்லாவற்றுக்கும் வசதி அளித்து உதவி செய்தல்;

(ஊ) தொழிற்பயிற்சி பெற்றவர்கள் தத்தமது விருப்பங்களுக்கும் திறன்களுக்கும் ஏற்ப வேலைகளைத் தெரிவுசெய்வதற்கு ஆட்களை இயலச் செய்வதற்கான தொழில் வழிகாட்டலும் மதியுரைச் சேவைகளும் வழங்குதல்;

(எ) திருப்திகரமாக தொழிற்பயிற்சி பூர்த்தி செய்துள்ள ஆட்களுக்கு இயலுமானவிடத்து, வேலை நிர்ணயிக்கும் சேவைகள் வழங்குதல்;

(ஏ) பொருளாதாரத்தின் ஆள்வலுத் தேவைகள் வேலைத்திறன்கள் மற்றும் வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்கள் ஆகியவற்றுக்கான தேவை ஆகியன பற்றிய ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுதல்;

(ஐ) தொழிற்பயிற்சி தொடர்பிலான ஒழுங்கமைப்புகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் தாபித்தல்;

(ஒ) சர்வதேச தொழிற்பயிற்சி ஒழுங்கமைப்புகளுடனும் நிறுவனங்களுடனும் தொடர்புகொண்டு தொடர்புகளைத் தாபித்தல்;

(ஓ) பகிரங்க மற்றும் தனியார் துறைகளுக்குத் தொழிற்பயிற்சிக்காகத் தேவைப்படும் பயிற்சி வழங்குநர்களுக்குப் பயிற்சி வழங்குவதை ஒருங்கிணைத்தலும் அதற்கு வசதி செய்தலும்.

அதிகார சபையின் தத்துவங்கள்.

4. (1) அதிகாரசபையானது அதன் குறிக்கோள்களுள் எதனையும் அல்லது அவை எல்லாவற்றையும் எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணிகளையும் செய்வதற்கு அல்லது அவற்றில் எதையும் செய்வதற்குத் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினால் அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, அதிகாரசபையானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

(அ) ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட துறையிலான தொழிற்பயிற்சிக்கான நிலையங்களை அல்லது நிறுவனங்களைத் தாபித்தலும் முகாமை செய்தலும்;

(ஆ) தொழிற்பயிற்சிக்கான பொறித்தொகுதியை அல்லது மூலப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் அல்லது அதற்காக வேறெவையேனும் வசதிகளை ஏற்பாடு செய்வதில் நிதி ரீதியாக அல்லது வேறுவகையாக உதவி செய்தல்;

(இ) அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான தொழிற்பயிற்சி தொடர்பிலான அத்தகைய எவையேனும் நிகழ்ச்சித்திட்டங்க களில் அல்லது செயற்பாடுகளில் பங்கு கொள்ளுதல் ;

(ஈ) தொழிற்பயிற்சியின் வெவ்வேறு துறைகளில் காலத்துக்குக்காலம் பேணப்பட்ட நியமனங்களையும் பெறப்பட்ட பெறுபேறுகளை யும் மதிப்பிட்டு மதிப்பீடு செய்தல் ;

(உ) தொழிற்பயிற்சியிலிருந்து ஆகக்கூடிய பெறுபேறுகளைப் பெறுவ தற்குப் புதிய ஒழுங்குமுறைகள், உத்திகள் மற்றும் உபகரணம் ஆகியன அறிமுகப்படுத்தப்படுவதை மேம்படுத்தல் ;

(ஊ) தொழிற்பயிற்சிக்கான நிலையங்களையும் நிறுவனங்களையும், அங்கே சரியான தரங்கள் பேணப்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்காக, பார்வையிடுதலும் கண்காணித்தலும் ;

(எ) தொழிற்பயிற்சிக்காக அதிகாரசபையினால் புரியப்படும் சேவைக ளுக்காக அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட வசதிகளுக்காக அல் லது உபகரணத்துக்காகக் கட்டணங்களை அல்லது வேறு விதிப் பனவுகளை விதித்தலும் அறவிடுதலும் ;

(ஏ) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் கொள்ளு தல், வைத்திருத்தல், குத்தகைக்கு எடுத்தல், அல்லது கொடுத் தல், ஈடுவைத்தல் அல்லது வாடகைக்கு விடுதல், அடகுவைத்தல் அல்லது விற்றல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல் ;

(ஐ) அதிகாரசபையின் பயிலுநர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள், என்போருக்கு நிதி உதவி, நலன்புரி, அத்துடன் பொழுதுபோக்கு வசதிகள், வீடு அத்துடன் வேறு வாழ்வசதியை வழங்குதல் ;

(ஒ) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன் படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது அதிகாரசபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் மூலமோ செய்து கொள்ளுதல் அத்துடன் நிறைவேற்று தல் ;

(ஓ) அதிகாரசபையின் அலுவல்களை நிருவகித்தல் தொடர்பாகவும் அதன் அலுவலர்கள், சேவையாளர்கள் எவ்போரின் நியமனங் கள், பதவியுயர்வுகள், ஊதியம், ஒழுக்காற்றுக்கட்டுப்பாடு, அத் துடன் அவர்களுக்கு லீவு வழங்குதல் என்பன உட்பட அவர் கள் தொடர்பாகவும் விதிகளை ஆக்குதல்;

(ஔ) அதிகாரசபையினால் தொழிற்பயிற்சிக்கெனத் தெரிவு செய்யப் பட்ட பயிலுநர்களுக்குத் தொழிற்பயிற்சி வழங்குவதற் கெனத் தொழில் தருநர்களுடன் உடன்படிக்கைகள் செய்து கொள்ளுதல் ; அத்துடன்

(க) பயிலுநர் ஒருவருக்குத் தொழிற்பயிற்சி வழங்கும் நோக்கத்துக் காக எத்தொழில்தருநரை ஈடுபடுத்த அதிகாரசபை முன்வரு கின்றதோ, அத்தொழில்தருநர் ஒவ்வொருவரும், அத்தகைய பயிற்சி வழங்குமுன் அத்தகைய பயிலுநருடன் ஒப்பந்தம் ஒன்று

செய்துகொள்வதையும் அத்தகைய ஒப்பந்தம் அதிகாரசபையுடன் பதிவுசெய்துகொள்ளப்படுவதையும் உறுதிசெய்தல்.

அதிகார சபையின் அமைப்பு.

5. (1) அதிகாரசபை, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அமைச்சரால் நியமிக்கப்படும் ஆறு உறுப்பினர்கள், இவர்களில் நாலு உறுப்பினர்கள் தனியார் துறையில் உள்ள தொழில் அதிபர்களிலிருந்து இருத்தல் வேண்டும் ;

இப்பந்தியின்கீழ் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் இதனை னகத்துப்பின்வர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்;

(ஆ) இளைஞர்கள் விவகாரங்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர் ;

(இ) கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர்;

(ஈ) கைத்தொழில் அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் ;

(உ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர்;

(ஊ) அப்போதைக்கு தொழில் ஆணையாளராகப் பதவி வகிக்கின்ற ஆள் அல்லது அவரது பிரதிநிதி;

(எ) 1990 ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்விச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய தொழில்பயில்வோர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் தவிசாளர் அல்லது அவரது பிரதிநிதி.

(2) அதிகாரசபையின் உறுப்பினர்களில் இருவரை முறையே (இதனகத்துப்பின்னர் முறையே "தவிசாளர்" "துணைத்தவிசாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதிகாரசபையின் தவிசாளராகவும், துணைத் தவிசாளராகவும் இருப்பதற்கு அமைச்சர் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

(3) தவிசாளர், அதிகாரசபையின் பிரதான நிறைவேற்றுநராக இருத்தல் வேண்டும்.

உறுப்பினர்களின் பதவிக் காலம்.

6. (1) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், ஒன்றில் பதவியிலிருந்து அகற்றப்பட்டால் அல்லது வேறு வகையில் அதனை வறிதாக்கினால் அல்லது பதவியில் தொடர்ந்து இருப்பதிலிருந்து தகைமை யற்றவராக்கப்பட்டாலன்றி, மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றிற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அமைச்சருக்கு அப் பயன்பட முகவரியிடப்பட்டனுப்பப்படும் கடிதமொன்றின்மூலம் எந்நேரத்திலும் அவரது பதவியிலிருந்து விலகலாமென்பதுடன், அத்தகைய பதவி வகித்தலானது அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன்மேல் பயனுறுவதாதலும் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும், சுகவீனம் காரணமாக இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் ஏதுவினால் அவரது பதவிக்குரிய கடமைகளை தற்காலிகமாக நிறைவேற்றுவதற்கு இயலாதவராக இருக்கின்றவிடத்து அமைச்சரானவர், அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென வேறு ஓர் ஆளை நியமிக்கலாம்.

(4) அமைச்சரானவர், அவ்வாறு செய்வது உசிதமானதெனக் கருதினால், அதற்கான காரணத்தைக் குறிப்பிட்டபின்பு நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரையும் அகற்றலாமென்பதுடன் அதன்மேல் அந்த உறுப்பினர் பதவியை வறிதாக்கியுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(5) பதவி விலகல், பதவியிலிருந்து அகற்றப்படுதல் மூலமாக அல்லது வேறுவிதமாக நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் பதவியை வறிதாக்குகின்றவிடத்து, அமைச்சர், அவரின் இடத்துக்கு இன்னோராளை நியமிக்கலாம், அத்துடன், அவ்வாறு நியமிக்கப்படும் ஆள், அவர் எவ்வாளை அடுத்து வருகின்றாரோ, அவ்வாளின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக் காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(6) காலம் கழிவதனால் பதவியை வறிதாக்கும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

தவிசாளரும் துணைத் தவிசாளரும்.

7. (1) விடயத்துக்கேற்றவாறு அதிகாரசபையின் தவிசாளர் அல்லது துணைத் தவிசாளர், அமைச்சருக்கு அப்பயன்கொண்ட கடிதம் கொடுப்பதன்மூலம் பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகலானது அது அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன்மேல் பயனுக்குவருதலும் வேண்டும்.

(2) அமைச்சர், அவ்வாறு செய்வது உசிதமானதென அவர் கருதினால், அதற்கான காரணங்கள் எவற்றையும் கொடுக்காமல் தவிசாளரையோ அல்லது துணைத் தவிசாளரையோ அவரவர் பதவிகளிலிருந்து நீக்கலாம்.

(3) ஓராம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைய அதிகாரசபையின் தவிசாளருடைய மற்றும் துணைத் தவிசாளருடைய உறுப்பாண்மைக் காலப்பகுதியே, அவர்களுடைய பதவிக்காலமாகவும் இருத்தல் வேண்டும்.

*அதிகார சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவராக இருப்பதிலிருந்தான அல்லது உறுப்பினர் ஒருவராகத்தொடர்ந்து இருப்பதிலிருந்தான தகைமை இழப்பு.*

**8.** ஆளொருவர், அவர்—

(அ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக, மாகாண சபையொன்றின் அல்லது ஓர் உள்ளூராதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக இருந்தால் அல்லது அவ்வாறு வந்தால்;

(ஆ) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ், சித்த சுவாதீனமற்றவராகக் காணப்பட்டால் அல்லது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்டால் ; அல்லது

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ், எந்த ஆள் கடனிறுக்க வகையற்றவர் ஒருவராக அல்லது வங்குரோத்தானவர் ஒருவராக வெளிப்படுத்தப்பட்டுள்ளாரோ அந்த ஆளொருவர் பொறுப்பு விடுக்கப்பட முடியாத ஒரு கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்குரோத்தானவராக இருந்தால் ; அல்லது

(ஈ) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்புக்குட்படுகின்றவராக அல்லது அதற்கு உட்பட்டவராக இருந்தால்,

அதிகார சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்து இருப்பதிலிருந்து தகைமையிழந்தவராதல் வேண்டும்.

*அமைச்சரின் பணிப்புரைகள்.*

**9.** அமைச்சர், அதிகாரசபையானது, இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பது மற்றும் அதன் பணிகளை நிறைவேற்றுவது தொடர்பில், அதிகார சபைக்கு அத்தகைய பொதுவான அல்லது சிறப்புப் பணிப்புரைகளை வழங்கலாம் என்பதுடன், அதிகார சபை அத்தகைய பணிப்புரைகளுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

*அதிகார சபையின் செயற்பாடுகள் பற்றிப் புலனாய்வு செய்வதற்குக் கட்டளையிடுவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.*

**10.** அமைச்சர், அதிகாரசபையின் எல்லாச் செயற்பாடுகளும் அல்லது அவற்றில் எவையும், அவர் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால் புலனாய்வு செய்யப்படுவதற்குக் காலத்துக்குக் காலம் கட்டளை இடலாம் என்பதுடன், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதன் மேல், அதிகாரசபை, அத்தகைய கட்டளைக்குப் பயன் கொடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா வசதிகளையும் அளித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவுதலும் வேண்டும்.

*வெற்றிடம் எதுவும் இருப்பதால் செயல்கள் வலிதற்றவையாகா.*

**11.** அதிகார சபையானது, அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடம் எதுவும் இருப்பது எப்படியிருப்பினும் செயற்படலாம். அத்துடன் அதிகாரசபையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கையானது, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருக்கும் காரணத்தினால் மாத்திரம் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் அல்லது பெயர் குறித்தலில் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கும் காரணத்தினால் மாத்திரம் வலிதற்றதெனக் கருதப்படுதலாகாது.

அதிகாரசபை உறுப்பினர்களுக்கான ஊதியம்.

12. அதிகார சபையின் உறுப்பினர்கள் எல்லோருக்கும் அல்லது அவர்களில் எவருக்கும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய விதங்களிலும் ஊதியம் அளிக்கப்படுதல் வேண்டும்.

அதிகாரசபையின் கூட்டங்கள்.

13. (1) அதிகாரசபையின் கூட்டங்கள் ஆகக்குறைந்தது மாதத்துக்கு ஒரு தடவையாவது நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கு அமைய அதிகாரசபையானது, அதன் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் கையாளப்படுதல் தொடர்பில் அதன் நடவடிக்கை முறையை ஒழுங்கு செய்யலாம்.

(3) அதிகார சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஏழாதல் வேண்டும்.

அதிகாரசபையின் இலச்சினை.

14. (1) அதிகாரசபையின் இலச்சினையானது, அதிகாரசபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் இலச்சினையானது, அதிகாரசபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்தில் மாற்றப்படலாம்.

(3) அதிகாரசபையின் இலச்சினை அதிகாரசபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையில் தவிர ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) அதிகாரசபையின் இலச்சினை எச்சாதனங்களில் அல்லது ஆவணங்களில் பொறிக்கப்பட்டுள்ளதோ, அச்சாதனங்கள் அல்லது ஆவணங்கள் பற்றிய இடாப்பொன்றை அதிகாரசபை பேணிவருதல் வேண்டும்.

தொழிற் பயிற்சி குழாம்கள்.

15. (1) அமைச்சர், எவையேனும் தொழில் பயிற்சி நிலையம் அல்லது தொழில்நுட்ப ஸ்தாபனம் அல்லது எவையேனும் தாத்தை, வகுப்பைச் சேர்ந்த தொழிற்பயிற்சிக்காக அல்லது தொடர்பான குறிப்பிட்ட காரியத்திற்காக (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பிடு செய்யப்படும்) தொழிற்பயிற்சிச் சபை ஒன்றை ஸ்தாபிக்கலாம்.

(2) ஒவ்வொரு சபைக்குமாக தவிசாளர் ஒருவரையும், அமைச்சர் அவர்களால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினதான வேறு உறுப்பினர்களையும் அமைச்சர் அவர்களால் நியமிக்க முடியும். குழாத்தின் தத்துவங்கள், பணிகள், கடமைகள் என்பன விதித்துரைக்கப்பட்டவாறானதாக இருத்தல் வேண்டும்.

(3) சபையின் உறுப்பினர்களின் ஊதியம் உட்பட சபையின் நிருவாகம் தொடர்பான செலவினங்கள் அதிகார சபையினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் II

### அதிகாரசபையின் பணியாட்டொகுதி

அதிகாரசபையின் பணியாட்டொகுதி.

16. (1) அதிகாரசபை அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு அதிகாரசபை நியமிக்கலாம்.

(2) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைவாக, அதிகாரசபை பின்வருவனவற்றைச் செய்யலாம் :—

(அ) அவ்வாறு நியமிக்கப்பட்ட அலுவலர்களையும் சேவையாளர்களையும் அதிகாரசபையின் பதவியிலிருந்து விலக்குதலும், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் ;

(ஆ) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் சம்பளம், கூலிகள் அல்லது ஏனைய ஊதியம் என்பவற்றை நிருணயித்தல் ;

(இ) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் சேவைக்கான நியதிகளையும், நிபந்தனைகளையும் தீர்மானித்தல்; அத்துடன்

(ஈ) அத்தகைய அலுவலர்களினதும், சேவையாளர்களினதும் நன்மைக்காகச் சகாயநிதியமொன்றை அல்லது ஓய்வூதிய செயற்றிட்டத்தைத் தாபித்தலும் ஒழுங்குபடுத்தலும் அத்துடன் அந்த நிதியத்திற்கு அல்லது செயற்றிட்டத்திற்கு உதவுதொகையளித்தலும்.

(3) இச்சட்டத்தின்கீழ், (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் விதிகள் ஆக்கப்படலாம்.

அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க சேவையிலுள்ள அலுவலர்களை நியமித்தல்.

17. (1) அதிகாரசபையின் வேண்டுகோளின் பேரில் பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும், பொது நிருவாகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் செயலாளரினதும் சம்மதத்துடன், அதிகாரசபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் ; அல்லது அதே போன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு, பகிரங்க சேவையிலிருக்கும் அலுவலர் எவரும் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும் நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு அரசாங்கத்தில் சேவைசெய்வதென்று உடன்பட்டுக்கொண்ட ஆளொருவரை அதிகாரசபை ஊழியத்தில் அமர்த்துமிடத்து, அவ்வாளினால் அதிகாரசபைக்குப் புரியப்படும் சேவைக்காலப்பகுதியெதுவும், அத்தகைய உடன்படிக்கைக்கான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்துக்குச் செய்யப்படும் சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில் உள்ளூராட்சிச் சேவையின் உறுப்பினர் எவரும் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினர் எவரும், அவ்வுறுப்பினரின், அலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்துடன் அதேபோன்ற சம்மதத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு, அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன், விடயத்துக்கேற்ற வேறு அதிகாரசபையினாலும் உள்ளூராட்சிச் சேவை மதியுரைச் சபையினாலும் அல்லது உள்ளூரதிகாரசபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறாக, ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் உட்பட அவை தொடர்பான அத்தகைய நியதி, நிபந்தனைகளின் மேல் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) ஆளொருவர், (5) ஆம் உட்பிரிவின்கீழ், அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அந்த ஆள் பணியாட்டொகுதியின் வேறெவரேனும் உறுப்பினரையொத்த அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

18. அதிகாரசபையானது, (இப்பிரிவினால் அதற்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவம் தவிர்ந்த) அதன் வேறு எவையேனும் தத்துவங்களை அல்லது பணிகளை அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்குக் கையளிக்கலாமென்பதுடன் அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தத்துவம் அல்லது பணி அத்தகைய அலுவலரால் அல்லது சேவையாளரால் அதிகாரசபையின் சிறப்பான அல்லது பொதுவான பணிப்புகளுக்கு அமைவாக பிரயோகிக்கப்படுதல் அல்லது நிறைவேற்றப்படுதல் வேண்டும். தத்துவங்கள், பணிகள் அத்துடன் கடமைகள் என்பவற்றை அதிகாரசபையின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் கையளித்தல்.

## பாகம் III

## தொழிற்பயிற்சி அபிவிருத்தி நிதியம்

19. அதிகாரசபை, அமைச்சரினதும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினதும் ஒருப்பாட்டுடன் அல்லது அதே போன்ற ஒருப்பாட்டுடன் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அதிகாரத்தின் நியதிகளுக்கிணங்க, இச்சட்டத்தின்கீழ் அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அதிகாரசபைக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை மேலதிகப்பற்று என்ற முறையில் அதிகாரசபையின் கடன் வாங்கும் தத்துவங்கள்.

அல்லது வேறு வகையில் கடனுகப் பெறலாம் அல்லது இணங்கப்பேசிக் கடனுகப் பெறலாம் :

ஆயின், இப்பிரிவின்கீழ் அதிகாரசபையினுல் கடனுகப் பெறப்பட்ட ஏதேனும் தொகை தொடர்பில் வெளி நிலுவையாக இருக்கும் தொகைகளின் கூட்டுத்தொகை, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினுல் தீர்மானிக்கப்படக்கூடிய வாறுன அத்தகைய பணத்தொகையை எந்நேரத்திலும் மிஞ்சுதல் ஆகாது.

தொழிற்பயிற்சி அபிவிருத்தி நிதியம்.

20. (1) (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) தொழிற்பயிற்சி அபிவிருத்தி நிதியம் என அழைக்கப்படவேண்டிய நிதியமொவறு தாபிக்கப்படுதல் வேணடும்.

(2) பின்வருவன நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) அதிகாரசபையின் உபயோகத்துக்காகப் பாராளுமன்றத்தினுல் காலத்துக்குக்காலம் ஒதுக்கீடு செய்யப்படக்கூடியவாறுன அத்தகைய எல்லாப் பணத்தொகைகள்;

(ஆ) நியமிக்கப்பட்ட திகதிக்கு நேர்முந்திய நாளன்று ஆள்வலுப் பிரிவின் மற்றும் முகாமைப் பயிற்சி நிறுவகத்தின வரவில் இருக்கும் எல்லாப் பணத்தொகைகள் ;

(இ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையினுல் வழங்கப்படும் தொழிற்பயிற்சி அல்லது சேவைகள் தொடர்பில் கட்டணங்கள், அறவீடுகள் மற்றும் இறுப்பனவுகள் என்றவகையில் சேகரிக்கப்படும் எல்லாப் பணத்தொகைகள் ;

(ஈ) மானியங்களாக அல்லது நன்கொடைகளாக அதிகாரசபையினுல் பெறப்படக்கூடியவாறுன அத்தகைய எலலாப் பணத்தொகைகள் ;

(உ) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும் பணிகளை நிறைவேற்றுகையிலும் அதிகாரசபையினுல் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகள்.

நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்தல்.

21. இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும், பணிகளை நிறைவேற்றுவதிலும் அதிகாரசபையினுல் உறப்படும் ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்காகத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும், அத்துடன் இச்சட்டத்தினுல் அல்லது அதன்கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றவாறுன அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றவாறுன அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

பயிற்சிக்காலத்தின்போது அளிக்கப்படும் படி.

22. (1) தொழிற்பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் ஒவ்வொரு பயிலுநருக்கும் நிதியத்திலிருந்து பயிற்சிப் படியொன்று கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, பயிலுநர்களுக்கு கொடுபடவேண்டிய படியின் அளவு பற்றி, அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் நிர்ணயித்தல் வேண்டும். வெவ்வேறு வகுதிகளைச் சேர்ந்த பயிலுநர்கள் தொடர்பில், அந்தந்த வகுதியிலுள்ள பயிலுநர்களின் கல்வித் தகைமைகளையும் வேலைத் திறன்களையும் கருத்திற்கொண்டு வெவ்வேறு படிகள் நிர்ணயிக்கப்படலாம்.

(3) அதிகாரசபையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் தாபனத்தில் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் பயிலுநர் ஒருவர், அத்தாபனத்தின தற்றுணிபின்பேரில் —

(அ) நிதியத்திலிருந்து அவர் பெறக்கூடிய படியுடன் சேர்த்து ஏதேனும் கொடுப்பனவை அவரின் தொழில்தருநரிடமிருந்து பெறுவதற்கு உரித்துடையவராகலாம்; அல்லது

(ஆ) நிதியத்திலிருந்து அவர் பெறக்கூடிய படியுடன் சேர்த்து, தமது தொழில்தருநருக்கு அவரால் செய்யப்படும் ஏதேனும் வேலைக்காக ஏதேனும் கொடுப்பனவை அவரின தொழில்தருநரிடமிருந்து பெறுவதற்கு உரித்துடையவராகலாம்; அல்லது

(இ) அத்தாபனத்தில் வேறு தொழிலாளர்களுக்கு மிகை ஊதியம் அல்லது ஊக்குவிப்பு ஊதியம் என்றவகையில் கொடுபடற்பாலதான ஏதேனும் கொடுப்பனவைத் தமது தொழில்தருநரிடமிருந்து பெறுவதற்கு உரித்துடையவராகலாம்.

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தினதும் 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க. ஊழியர் சகாய நிதியச் சட்டத்தினதும் ஏற்பாடுகள் தொழில்பயிலுநருக்கு ஏற்புடைத்தாதலாகாது.

23. நியமிக்கப்பட்ட திகதியிலிருந்தும், அதன் பின்னரும், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தினதும், 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தினதும் ஏற்பாடுகள், அதிகாரசபையால் தொழில் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்ட தொழில்பயிலுநருக்கு ஏற்புடைத்தாதலாகாது.

அதிகாரசபையின் நிதியாண்டு

24. பஞ்சாங்க ஆண்டே அதிகாரசபையின் நிதியாண்டாதல் வேண்டும்.

அதிகாரசபையின் கணக்குகளின் கணக்காய்வு.

25. பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், அதிகாரசபையின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் IV

### பொது

தகவல் தருமாறு கோரும் தத்துவம் அதிகாரசபைக்கு இருத்தல் வேண்டும்.

26. அதிகாரசபை அல்லது அதிகாரசபையால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரசபையின் எவரேனும் அலுவலர், அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள், இந்தச் சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்கள் பிரயோகிக்கப்படுவதையும் பணிகள் நிறைவேற்றப்படுவதையும் அதிகாரசபைக்கு இயலச்செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அந்த ஆளின் அறிவுக்குட்பட்டதும் அத்துடன் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடர்பிலானதுமான அத்தகைய எல்லாத் தகவலையும் அதிகாரசபைக்கு அல்லது அந்த அலுவலருக்கு கொடுக்குமாறு ஆளெவரையும் எழுத்திலான அறிவித்தல் மூலம் தேவைப்படுத்தலாம்.

அரசின் ஆதனம் ஒப்பந்தங்கள் அத்துடன் பொறுப்புகள் என்பவற்றை அதிகாரசபைக்கு மாற்றுதல்.

27. (1) அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் இதனகத்துப்பின்னர் அடங்கியிருக்கும் ஏற்பாடுகளுக்கு அமைவாகப் பின்வருவனவற்றை அதிகாரசபைக்கு மாற்றலாம் :—

(அ) அதிகாரசபையின் பணிகள் நிறைவேற்றப்படுவதற்குத் தேவைப்படும் ஏதாயினும் அரசின் தொழிற்பயிற்சி நிலையம் அல்லது தொழில்நுட்ப நிலையம் அல்லது ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் ; அத்துடன்

(ஆ) அதிகாரசபையின் பணிகள் எவற்றுடனும் தொடர்புபட்ட அரசின் ஏதேனும் ஒப்பந்தம் அல்லது பொறுப்பு.

(2) அரசின் அசைவுள்ள ஆதனம் அல்லது ஒப்பந்தம் அல்லது பொறுப்பு எதுவும் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாடின்றி அதிகாரசபைக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் மாற்றப்படுதலாகாது.

(3) அரசின் அசைவற்ற ஆதனம் எதுவும் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும், எந்த அமைச்சருக்கு அரச காணிகள் என்னும் விடயம் அப்போதைக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரினதும் ஒருப்பாடின்றி (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபைக்கு மாற்றப்படுதலாகாது.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்று வெளியிடப்பட்டதன் மேல், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ள திகதியிலிருந்து —

(அ) அந்த கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஆதனங்கள் அதிகாரசபைக்கு உரித்தாக்கப்படுதலும் அதன் ஆதனங்களுமாதல் வேண்டும் ;

(ஆ) அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஒப்பந்தங்கள் அதிகாரசபையின் ஒப்பந்தங்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பந்தங்களின்கீழ் உள்ளவாறான அரசின் உரிமைகளும் கடப்பாடுகளும் அதிகாரசபையின் உரிமைகளும் கடப்பாடுகளுமாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்கள் அதிகார சபையின் பொறுப்புக்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**காணியைக் கட்டாயமாகக் கொள்வதற்கான தத்துவம்.**

28. அமைச்சரானவர் அதிகாரசபையின் ஏதேனும் நோக்கத்துக்காக கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையொன்றின் மூலம் அரசகாணி தவிர்ந்த ஏதே னும் காணியின் அல்லது ஏதேனும் காணியிலான ஏதேனும் அக்கறையின் பிரேரிக்கப்பட்ட கொள்ளலை அங்கீகரிக்கலாமென்பதுடன் அத்தகைய கட்டளை அவ்வாறு வெளியிடப்படும்பொழுது, கட்டளையில் குறித்துரைக் கப்பட்ட காணி அல்லது ஏதேனும் காணியிலான அக்கறை ஒரு பொது நோக்கத்திற்காக தேவைப்படுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன், (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளல் சட்டத்தின் கீழ் கொள்ளவும் படலாம், அத்துடன் அவ்வாறு கொள்ளப்பட்டதும் சட்டத்தின் கீழ் அதிகாரசபைக்கு மாற்றப்படுதலும் வேண்டும்.

**அதிகாரசபை இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.**

29. அதிகாரசபையானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்டதொரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அவ்வாறு பொருள் கொள் ளப்படுதலும் வேண்டும்.

**அதிகாரசபையின் உறுப்பினர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள் என்போர் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.**

30. தண்டனைச் சட்டக்கோவையின் நோக்கங்களுக்காகவும் கருத்தாக் கும் உட்பட அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்கள், அலுவலர்கள் அத்துடன் சேவையாளர்கள் என்போர் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**இச்சட்டத்தின் கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின பேரில் எடுக்கப்படும் நடவடிக்கைக்கான பாதுகாப்பு**

31. (1) தொடர்ச்சி அல்லது வழக்குத்தொடுப்பு எதுவும் அதிகாரசபை யின் எவரேனும் உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளரினால் இச் சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பில் அவரால் நல்லெண் ணத்துடன் செய்யப்படுகின்ற அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படு கின்ற ஏதேனும் செயலுக்காக அவருக்கு எதிராக இருத்தலாகாது.

(2) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின்மீது ஆளெவரினாலும் செய்யப்பட்டதான அல்லது செய்யப்பட்டதாகக் கொள் ளப்பட்டதான ஏதேனும் செயல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தின் முன் அத்தகைய ஆளுக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது தொடர்ச்சியில் அல்லது குற்றத்தொடுப்பில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டவாறு, அத்தகைய எவரேனும் ஆளினால் உறப் பட்ட எவையேனும் செலவினங்கள் நீதிமன்றமானது அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டது எனக் கொண்டால், அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றத்தொடுப்பில் அத்தகைய செலவினங்கள் அவரால் அறவிடப்பட்டாலொழிய அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

நிலைமாறுகால ஏற்பாடுகள்.

32. நியமிக்கப்பட்ட திகதியிலிருந்தும் அதற்குப் பின்னரும் —

(அ) நியமிக்கப்பட்ட திகதிக்கு நேர்முந்திய நாளன்று ஆள்வலுப் பிரிவினாலும் முகாரிப் பயிற்சி நிறுவகத்தாலும் நிறைவேற்றப்பட்ட தொழிற்பயிற்சி தொடர்பிலான எல்லாப் பணிகளும், அதிகார சபையினால் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து நிறைவேற்றப் படல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஆள்வலுப் பிரிவின் மற்றும் முகாரிப் பயிற்சி நிறுவகத்தின் எல்லா அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனம், அத்துடன், ஆள்வலுப் பிரிவினால் மற்றும் முகாரிப் பயிற்சி நிறுவகத்தால் செய்யப்பட்டனவும் நியமிக்கப்பட்ட திகதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவில் இருக்கின்றனவுமான எல்லா ஒப்பந்தங் களும், நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து அதிகாரசபைக்குக் கைமாற்றப்பட்டனவாகவும் அதற்கு உரித்தாக்கப்பட்டனவாக வும் இருத்தல் வேண்டும்.

சேமிப்புகள்

33. இச்சட்டத்தின் வேறு ஏற்பாடு எதுவும் எவ்வாறிருப்பினும் —

(அ) நியமிக்கப்பட்ட திகதிக்கு நேர்முந்திய நாளன்று ஆள்வலுப் பிரிவின் மற்றும் முகாரிப் பயிற்சி நிறுவகத்தின் சார்பில் எவரேனும் பயிற்சியாளருடன் அரசினால் செய்துகொள்ளப்பட்டு இருக்கின்றதான ஒப்பந்தம் ஒவ்வொன்றும் இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபை அப்பயிலுநருடன் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து செய்துகொண்ட ஒப்பந்தமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) நியமிக்கப்பட்ட திகதிக்கு நேர்முந்திய நாளன்று ஆள்வலுப் பிரிவினால் மற்றும் முகாரிப் பயிற்சி நிறுவகத்தால் ஆக்கப்பட்டு வலுவில் இருக்கும் எல்லா விதிகளும் அல்லது விதித்துரைக்கப் பட்ட எல்லாப் பயிற்சித் தரங்களும், நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து அவை இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் ஆகவும் கருதப்படல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்

34. (1) அமைச்சரானவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் அல்லது கோட்பாடுகளுக்குப் பயனளிக்கும் நோக்கத்திற்காக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பாக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:—

(அ) தொழிற்பயிற்சியின் பல்வேறு துறைகளுக்குப் பயிலுநர்களாகத் தெரிவுசெய்யப்படுவதற்குத் திருப்திசெய்யப்படவேண்டிய கல்வித் தரங்களும் உடல்ரீதியான தகுதியும்;

(ஆ) எத்தாபனங்களில் அல்லது நிறுவனங்களில் பயிலுநர்கள் தொழிற்பயிற்சி பெறுகின்றார்களோ, அத்தாபனங்களுக்கும் அல்லது நிறுவனங்களும் பயிலுநர்களுக்குமிடையில் செய்யப்படும் பயிற்சி சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்படவேண்டிய நியதிகள் நிபந்தனைகள்,

(ஞ) வெவ்வேறு தொழிற்பயிற்சித் துறைகளில் பயிலுநர்களுக்கான பயிற்சிக்காலப்பகுதி ;

(ச) வெவ்வேறு தொழிற்பயிற்சித் துறைகளில் பயிலுநர்கள் பெற்றுக் கொள்ளவேண்டிய செயல்முறைப் பயிற்சி மற்றும் திறவன ரீதியான பயிற்சிவகைகள் ;

(உ) இச்சட்டத்தின்கீழ் தொழிற்பயிற்சி அளிப்பதற்குப் பொறுப்பேற்கும் தாபனங்களினது அல்லது நிறுவனங்களினது கடப்பாடுகள் ;

(ஊ) இச்சட்டத்தின்கீழ் தொழிற்பயிற்சி பெறும் பயிலுநர்களின் கடப்பாடுகள் ;

(எ) இச்சட்டத்தின்கீழ் தொழிற்பயிற்சி பெறுகின்ற பயிலுநர்களின் வேலை நேரங்களும் அவர்களுக்குரித்தான லீவும் ;

(ஏ) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்படும் எல்லாக் கருமங்களும்.

(3) அமைச்சரால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் வெளியிடப்படவேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் அது வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாகப் பாராளுமன்றத்தின் முன்னர் அங்கீகாரத்திற்கெனக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அதற்கான அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஒழுங்குவிதி எதுவும் எத்திகதியன்று அவ்வாறு இல்லாதாக்கப்பட்டதெனக் கருதப்படுகின்றது பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

35. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

பொருள் கோடல்.

36. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய—

"முகாரிப் பயிற்சி நிறுவகம்" என்பது, தொழில் திணைக்களத்தின் முகாரிப் பயிற்சி நிறுவகம் எனப் பொருள்படும்;

"உள்ளூரதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேச சபை எனப் பொருள்படும் என்பதுடன் அது அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்படும் தத்துவங்களோடு புரியப்படும் பணிகளோடு அல்லது நிறைவேற்றப்படும் கடமைகளோடு நேரொத்த அல்லது அவற்றைப் போன்ற தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகிப்பதற்கு புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அமைக்கப்படும் அல்லது தாபிக்கப்படும் ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்;

"ஆள்வலுப் பிரிவு" என்பது, தொழில் திணைக்களத்தின் ஆள்வலுப் பிரிவெனப் பொருள்படும்;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்டதெனப் பொருள்படும்;

"மாகாண சபை" என்பது, அரசியலமைப்பின் XVII அ என்னும் அத்தியாயத்தினால் தாபிக்கப்பட்ட மாகாண சபையொன்று எனப் பொருள்படும்;

"தொழிற் பயிற்சி" என்பது, ஊதியம் கொடுக்கக்கூடிய வேலைவாய்ப்புக்கான திறன்களின் கிரமமான அபிவிருத்தி எனப் பொருள்படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.